**Judicial Form No.53**
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTARATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions
} Case No. CC 42 of 2023

Depositions of PW -1 witness for ________ { Prosecution / Defence / Court

Name : சாரத பிரீத்தா

Father's Name : க/பெ. சுபாஷ்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21st **day of February** 2024.

**(அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**முதல்விசாரணை**

1. நான் தற்போது சிங்காநல்லூரில் வசித்து வருகிறேன்.

2. கடந்த 12.07.2021 ம் தேதியன்று மாலை 5.30 மணியளவில் நான் பேக்கரிக்கு வேலைக்கு சென்று விட்டு அயோத்திபுரத்தில் உள்ள வீட்டிற்கு வந்துவிட்டு மீண்டும் துணி தைப்பதற்காக டெயிலர் கடைக்கு சென்று விட்டு நான் திரும்பி சென்று கொண்டிருக்கும்போது சாலையின் ஓரமாக நின்று கொண்டிருந்த ஒருவர் திடீரென்று என்னுடைய 3 சவரண் எடையுள்ள ரூ.45,000/- மதிப்புள்ள காசுடன் கூடிய தாலி செயினை பறித்து விட்டார்.

3. நான் சத்தம் போடவும் அருகிலிருந்தவர்கள் வந்துவிட்டார்கள். அவர்கள் செயினை பறித்தவரை பிடிக்க முயற்சி செய்தார்கள். கடைசியாக சிவா, ஆறுமுகம்

ஆகியோர் செயினை பறித்தவரை பிடித்துவிட்டார்கள். பிறகு செயினை பறித்தவரை காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம். ஆஜர் எதிரி தான் சம்பவ சமயத்தில் என்னுடைய செயினை பறித்தவர் ஆவார்.

4. பின்னர் காவல் நிலையத்தில் புகார் அளித்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் புகார் நான் அளித்தது ஆகும். **(புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள செயின் தான் சம்பவ சமயத்தில் பறித்து செயின் ஆகும். அது அறுந்த நிலையில் இருப்பதால் என்னால் போடஇயவில்லை. **(புகைப்படம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து செயினை திரும்ப பெற்று கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. (எதிரி ஆஜர். எதிரியின் வழக்கறிஞர் ஆஜர் இல்லை. சாட்சியை வருவது குறித்த தகவல் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டது. தொலைபேசியின் வாயிலாக ஏற்கனவே எதிரியின் வழக்கறிஞருக்கு நேற்றைய தினமே தகவல் கொடுக்கப்பட்டுவிட்டது. இன்றைய தினம் ஆஜர் எதிரி அவருடைய வழக்கறிஞரை தொடர்பு கொண்டதற்கு அழைப்பை ஏற்க வில்லை என்றும் மனுதாக்கல் செய்து குறுக்கு விசாரணை செய்துகொள்வதாக தெரிவித்துவிட்டார் என்று கூறினார். ஆஜர் எதிரியின் குறுக்குவிசாரணை செய்யவில்லை என திறந்த நீதிமன்றத்தில் தெரிவித்துவிட்டார். எனவே அ.சா.1 ன் சாட்சியம் முடிக்கப்பட்டது)

**மறுவிசாரணை** இல்லை

G RUBANA
Digitally signed by G RUBANA
Date: 2024.02.21 16:17:24 -1000

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**

**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTARATE, SULUR.**

| | | |
|---|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | } | Case No. CC 42 of 2023 |

Depositions of PW - 2 witness for ________ { Prosecution / Defence / Court

Name : சுபாஷ்
Father's Name : த/பெ. ராஜு
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21st **day of February** 2024.

**(அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**முதல்விசாரணை**

1. நான் தற்போது சிங்காநல்லூரில் வசித்து ஹோண்டா சோரூமில் மேலாளராக வருகிறேன்.

2. கடந்த 12.07.2021 ம் தேதியன்று மாலை 6.30 மணியளவில் நான் என்னுடைய வேலையை முடித்து விட்டு வந்து கொண்டிருந்தபோது என்னுடைய மனைவி என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு என் மனைவியின் தங்க காசுபோட்ட 3 சவரன் தாலி செயினை பறித்து விட்டதாக கூறினார். மேலும் நகையை திருடியவரை அருகிலிருந்தவர்கள் மன்றும் என் மனைவி ஆகியோர் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று விட்டதாக கூறினார்கள். அதனால் நான் காவல் நிலையத்திற்கு சென்றேன். என்

மனைவி புகார் அளித்தார். ஆஜர் எதிரியை தான் அன்றைய தினம் காவல் நிலையத்தில் பொதுமக்கள் மற்றும் என் மனைவி ஒப்படைத்த நபர் ஆவார்.

3. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் படிவம் 91ல் உள்ள 1 வது சாட்சி கையொப்பம் என்னுடையதாகும். எதிரியையும் நகைகையும் காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம். அதற்காக அக்கையொப்பத்தை என்னிடம் பெற்றார்கள். என்னுடன் கிராந்திகுமார் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தார்.

4. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் பார்வைமகசரில் உள்ள 1 வது சாட்சி கையொப்பம் என்னுடையதாகும். சம்பவ தினத்திற்கு மறுநாள் காலை 6 மணியளவில் சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்தார்கள் அதற்கு சாட்சியாக நானும் கிராந்திகுமார் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். **(பார்வைமகசர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. (எதிரி ஆஜர். எதிரியின் வழக்கறிஞர் ஆஜர் இல்லை. சாட்சியை வருவது குறித்த தகவல் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டது. தொலைபேசியின் வாயிலாக ஏற்கனவே எதிரியின் வழக்கறிஞருக்கு நேற்றைய தினமே தகவல் கொடுக்கப்பட்டுவிட்டது. இன்றைய தினம் ஆஜர் எதிரி அவருடைய வழக்கறிஞரை தொடர்பு கொண்டதற்கு அழைப்பை ஏற்க வில்லை என்றும் மனுதாக்கல் செய்து குறுக்கு விசாரணை செய்துகொள்வதாக தெரிவித்துவிட்டார் என்று கூறினார். ஆஜர் எதிரியின் குறுக்குவிசாரணை செய்யவில்லை என திறந்த நீதிமன்றத்தில் தெரிவித்துவிட்டார். எனவே அ.சா.2ன் சாட்சியம் முடிக்கப்பட்டது)

**மறுவிசாரணை** இல்லை

G RUBANA

Digitally signed by G RUBANA
Date: 2024.02.21 16:17:40 -1000

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**